# <u>பத்திரிக்கை செய்தி</u>

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குக்காக செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சிறப்பு திட்டம் ‘சகி’ என்ற ஒருங்கிணைந்த சேவை மையத்தில் பணிபுரிய பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

1. **<u>மைய நிர்வாகி</u>** (Centre Administrator) (பதவி–2)

சமூகப் பணியில் முதுகலை பட்டம் (Master’s Degree in Social Work) பெற்றிருக்க வேண்டும். உளவியல் ஆலோசனை அல்லது வளர்ச்சி மேலாண்மையில் பெண்கள் பிரச்சினைகளுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சாரா திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் குறைந்த பட்சம் 4 வருட அனுபவம் உடையவராகவும், உளவியல் ஆலோசனையில் ஒரு நிறுவனத்திலோ அல்லது வெளிப்பணிகளிலோ குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். தங்குமிடம் வழங்கப்படும். மாத ஊதியம் 30,000/– ஆகும்.

2. **<u>ஆலோசகர்:</u>** (Senior Counsellor) (பதவி–2)

சமூகப் பணியில் முதுகலை பட்டம் (Master’s Degree in Social Work) பெற்றிருக்க வேண்டும். உளவியல் ஆலோசகர் (Counselling Psychology) (அல்லது) மேலாண்மை வளர்ச்சியில் (Development Management) பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சாராத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் 2 வருட முன்அனுபவம் உடையவராகவும், உளவியல் ஆலோசனையில் ஒரு நிறுவனத்திலோ அல்லது வெளிப்பணிகளிலோ குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். தேவைப்படும் பட்சத்தில் சுழற்சி முறையில் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டி இருக்கும். மாத ஊதியம் 20,000/– ஆகும்.

3. **<u>வழக்கு அலுவலர்கள்</u>** (Case worker) (பதவி–6)

சமூகப் பணியில் இளங்கலை பட்டம் (Bachelor’s Degree in Social Work) பெற்றிருக்க வேண்டும். உளவியல் ஆலோசகர் (Counselling Psychology) (அல்லது) மேலாண்மை வளர்ச்சியில் (Development Management) பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சாராத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் 1 வருட முன்அனுபவம் உடையவராகவும், உளவியல் ஆலோசனையில் ஒரு நிறுவனத்திலோ அல்லது வெளிப்பணிகளிலோ குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். தேவைப்படும் பட்சத்தில் சுழற்சி முறையில் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டி இருக்கும். மாத ஊதியம் 15,000/– ஆகும்.

4. **<u>தகவல் தொழில் நுட்ப அலுவலர்</u>** (IT Admin) (பதவி–2)

கணினி அறிவியலில் (B.C.A., BSc. Computer Science) அல்லது கணினி பொறியியல் (B.E. Computer Science) இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். கணினி அறிவியலில் முதுகலை பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பெண்களுக்கு எதிரான வன்முறையிலிருந்து காக்கும் அரசு மற்றும் அரசு சாராத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் முன்அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். மாத ஊதியம் 18,000/– ஆகும்.

5. **<u>பன்முக உதவியாளர்</u>** (Multi-purpose Helper) (பதவி–2)

எதாவது அலுவலகத்தில் பணிபுரிந்த அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு சமையல் தெரிந்திருக்க வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். மாத ஊதியம் 6,400/– ஆகும்.

6. **<u>பாதுகாப்பாளர்/ஓட்டுநர்</u>** (Security Guard/Driver) (பதவி–3),

அரசு அல்லது புகழ்பெற்ற நிறுவனத்தில் பாதுகாப்புப் பணியாளராக பணியாற்றி அனுபவம் மற்றும் சென்னை மாவட்டத்தில் நான்கு சக்கர வாகனம் ஓட்டிய அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். மாத ஊதியம் 10,000/– ஆகும்.

விரும்பும் பதவிகளுக்கு உரிய சான்றிதழ்களுடன் 13.03.2020 மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் 8–வது தளம், சிங்காரவேலன் மாளிகை, இராஜாஜி சாலை, சென்னை–01 என்ற முகவரியில் நேரடியாக விண்ணப்பம் செய்திடுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சியர்,
சென்னை.

மாவட்ட சமூகநல அலுவலர்,
சென்னை.